**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2017**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையிலும் வருமானச் செலவினக் கணக்கிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்**

---

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகள் (பெறுமானத்தேய்வு கொள்கை தவிர) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 3,881,861 தொகையான மூலதனச் தன்மையிலான செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஆதுனங்கள், பொறிகள், உபகரணங்கள் வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 17,384,101 மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 32,600 ஆன திருத்தச் செலவினம் வருமானச் செலவினக் கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஐந்தொகையில் முதலீடு மற்றும் நன்கொடை கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது.

(இ) தொலைபேசி கோபுர வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் ரூபா 1,233,500 குறைத்து வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 1,277,000 கூட்டுத்தொகையாக இருந்த போதும் அப்பெற வேண்டிய பெறுமதி ரூபா 717,000 ஆல் குறைத்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ஊழியர் சேமலாப நிதிய செலவினம் ரூபா 353,370 ஆக இருந்த போதும் பணமாக செலுத்திய ரூபா 326,356 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தனால் ரூபா 27,014 தொகை குறைத்து வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 275,221 ஆல் நடைமுறைப் பொறுப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு ரூபா 13,266 ஆல் நடைமுறைப் பொறுப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொது திறைசேரியால் பேணப்படுகின்ற பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் நிலையான வைப்புகளுக்காக ரூபா 6,004,023 ஆன வட்டி பெறுவனவு சீராக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந் நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த மூலதன மற்றும் வருமானச் செலவினம் முறையே ரூபா 2,600,000 மற்றும் ரூபா 12,668,126 இற்காக நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் அதற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 330,297,914 கூட்டுப்பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பன பேணப்படாதிருந்தமையால் கணக்காய்வின் போது முழுமைத்தன்மை, நிலைத்திருத்தல் மற்றும் பெறுமதி என்பவற்றின் சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நடைமுறையல்லாத பொறுப்புக்கள் ரூபா 332,483,093 தொகை தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள் மற்றும் அட்டவணைகள் என்பன பேணப்படாதிருந்தமையால் அவற்றின் சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| i. | நிதிப் பிரமாணம் 177 | ஒவ்வொரு பெறுவனவுக்காகவும் பற்றுச்சீட்டொன்று வழங்கப்பட வேண்டிய போதும் ரூபா 3,499,500 ஆன வருமானத்திற்காக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| ii | நிதிப்பிரமாணம் 237(ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 167,790 பெறுமதியான நுழைவுச் சீட்டு புத்தகங்கள் மற்றும் ரூபா 40,000 பெறுமதியான நீர் பம்பியொன்றும் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் இருப்புச் சான்றிதழ்களும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii | நிதிப்பிரமாணம் 395(இ) | மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதத்திற்குரிய வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| iv. | நிதிப்பிரமாணம் 446(2) | காசேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வில்லை. |
| v. | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | நிதியத்திற்குச் சொந்தமான 03 வாகனங்களுக்குரிய சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்ததுடன் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் திரண்ட நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 832,468 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 218,799 ஆக காணப்பட்டதால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 613,669 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சகல வசதிகளைுடன் கூடிய 2 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அச்சுற்றுலா விடுதிகளைத் திருத்தியமைப்பதற்காக ரூபா 971,783 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது அச்சுற்றுலா விடுதிகளிலிருந்து எவ்வித வருமானமும் உழைக்கக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திருத்த வேலைகளுக்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் ரூபா 1,829,757 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்யும் போது முறையான நடைமுறையென்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டல் நியதிகளுக்கு இணங்காமல் விலை கோரலொன்று இடம்பெறாமல் 3 சந்தர்ப்பங்களின் போது ரூபா 251,226 ஆன நிர்மாணங்களுக்காக மூலப்பொருட்களும் பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

முன்னைய ஆண்டில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக கொடுப்பனவு தாமதமாகிய காரணத்தினால் மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்ககளில் ரூபா 18,022 ஆன மிகை கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 செயலாற்றல்

2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (கெ) வரையான 20 நோக்கங்களில் 4 விடயங்கள் தவிர ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்தற்குள் நிதியம் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2½ ஆண்டிற்கு மேற்பட்ட காலமொன்று தாமதிக்கப்பட்டு 2020 திசெம்பர் 01 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) கணக்கீடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிர்வாகம்